**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1. அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட உயர்ந்தபட்ச தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, கொழும்பு பல்கழைகத்துடன் இணைக்கப்பட்ட மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகமானது 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய கணக்கேடுகளை முறையாகப் பேணியுள்ளது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிரயாப்படுகின்றேன்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் பட்டோலைகளுடனும் பரீட்சை மீதியுடனும் இணங்காத சந்தர்ப்பங்கள் நிறுவனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டதுடன் உரிய விளக்கமளிப்புக்களும் திருத்தங்களும் கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ளன.

### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

(அ) இடமாற்றங்கள் மற்றும் சேவையிலிருந்து நீக்கப்பட்டதன் காரணமாக தற்போது சேவையில் ஈடுபடுத்தப்படாத பதவியணியிலுள்ள ஆறு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 13,224 கூட்டுமொத்தமான கடன் மீதி ஒன்று மூன்று ஆண்டு காலமாக அறவிடப்படாது காணப்பட்டது.

(ஆ) பெறவேண்டிய கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 209,761 தொகையான நானாவித முற்பணங்களும் ரூபா 43,479 தொகையான முதலீட்டு வட்டி வருமானங்களும் மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) செலுத்தவேண்டிய கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட மூன்று ஆண்டுகளுக்கு மேல் பல்வேறு வழங்குனர்களிடமிருந்து நிறுத்திவைக்கப்பட்ட பணங்களின் பெறுமதி ரூபா 54,867 ஆக இருந்தது.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

ரூபா 285,738,457 கிரயமான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, மெய்மையாய்வுச் சபை அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான | கல்விசாரா பதவியணியிலுள்ள உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் 60 வயதுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தும் அந்த |

| | | |
|---|---|---|
| | தாபன விதிக்கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 5.2 ஆம் பந்தி | வயதெல்லையினைக் கவனத்தில் கொள்ளாது 61 வயதுடைய இரண்டு உத்தியோகத்தர்கள் அமைச்சரவை அங்கீகாரமின்றி தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். இது தொடர்பாக வேறு மாற்றுவழிகள் இல்லை என பணிப்பாளர் தெரிவித்திருந்தார். |
| (ஆ) | PGIM/MERC/DFMOL/2009 ஆம் இலக்க 2009 யூன் 19 ஆந் திகதிய கடிதம் | தொலைக் கல்வியினை நவீன மயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குடும்ப சுகாதார டிப்ளோமா கற்கைநெறிக்காக கிடைத்த நிறுவன நிதிகளிலிருந்து செலவு செய்தல் தொடர்பாக நிறுவனப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்திட்ட நிதிகளிலிருந்து விரிவுரைக் கட்டணங்கள் செலுத்தப்படலாகாது எனினும் நிறுவன நிதிகளிலிருந்து செயற்திட்டம் தொடர்பாக படிப் பணங்கள் செலுத்தப்பட முடியாது. எனினும் அவ் அறிவுறுத்தல்களுக்கு முரணாக செயற்திட்ட நிதிகளிலிருந்து ஆலோசனைக் கட்டணங்களாக ரூபா 403,000 தொகையும் நிறுவன நிதிகளிலிருந்து ஒருங்கிணைப்பு படியாக ரூபா 392,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1. நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் செயற்பாடுகளின் விளைவுகள் மீண்டுவரும் செலவுகளுக்கான அரசாங்க மானியத்தினைக் கணக்கிலெடுத்துக் கொள்வதற்கு முன்னர் ரூபா 45,558,680 பற்றாக்குறையாக இருந்ததுடன் முன்னயை ஆண்டிற்கான தொடர்புபட்ட பற்றாக்குறை ரூபா 48,145,401 ஆக இருந்தது. மீண்டுவரும் செலவுகளுக்கான ரூபா 72,909,000 தொகையான அரசாங்க மானியத்தினை கணக்கிலெடுத்துக்கொண்டதன் பின்னர் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 27,350,320 மிகையாக மாறியிருந்ததுடன் முன்னயை ஆண்டின் மீண்டுவரும் செலவுகளுக்கான ரூபா 74,800,000 தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக அந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா 26,654,599 மிகையாக மாறியிருந்தது.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 2.2.1 செயலாற்றல்

மீளாய்வாண்டில் நிறுவனத்தினால் பல்வேறு பட்டப்பின்படிப்பு கற்கை நெறிகளின் கீழ் 3,209 வைத்தியர்களுக்காக பரீட்சை நடாத்தப்பட்டிருந்ததுடன் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை 1,053 ஆகும்.

#### 2.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) பல்கலைக்கழகங்கள் தாபன விதிக்கோவையின் XXVI ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் உயர்கல்வி நிறுவனங்களுக்குரிய அனைத்துச் சொத்துக்களும் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட்டு நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம் உரிய மீளாய்வுச் சபை அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 - 2010 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 13,282,413 பெறுமதியான சொத்துக்கள், நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அக்காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 18,709,581 பெறுமதியான சொத்துக்கள் பிரதான பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறிய பதிவேட்டினை நாளது வரையாக்காததன் காரணமாக பல்கலைக்கழகங்கள் தாபன விதிக் கோவையின் XXVI ஆம் அத்தியாயத்தின் 2.7 மற்றும் 2.8 ஆம் பந்திகளின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ள முடியாதிருந்தது.

(இ) பல்கலைக்கழகங்கள் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.9 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு விரிவுரையாளருக்கு/ உத்தியோகத்தருக்கு தனிப்பட்ட அல்லது கடமைரீதியான தேவைப்பாட்டிற்காக வழங்கப்பட்ட பொருட்கள் அவரின் தனிப்பட்ட பொறுப்பில் இருக்கவேண்டியதுடன் அப்பொருட்கள் பொறுப்பேற்கப்பட்டமையினை உறுதிப்படுத்தல்களுடன் அது தொடர்பாக பொருள் பதிவேட்டில் குறிப்பிடப்படல் வேண்டும். எனினும், நிறுவனத்தினால் விரிவுரையாளர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்ட ரூபா 11,624,075 பெறுமதியான சொத்துக்களை வழங்கும் போது அவ் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------------

மூலதனச் செலவுகள் தொடர்பாக பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவுகளுக்குமிடையே குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் காணப்பட்டதனால் பாதீடு செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

**---------------------------------------------------------**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் நிறுவனத்தின் பணிப்பாளருக்கு காலத்துக்குக் காலம் தெரிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஆ) வருமானங்களை கணக்கீடு செய்தல்